13 OCT 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

பொது சன நூலகம்
11 OCT 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி26 திங்கட்கிழமை (12-10-1998) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:272

### பருத்தித்துறைக் கடலில் சம்பவம்

# கப்பலில் வந்த கவசவாகனம் கடலில் வீழ்ந்து மூழ்கியது!

## இரு படையினர் பலி 8 பேரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 12

பருத்தித்துறைக் கடற்பகுதியில் 'லங்கா முடித்த' சரக்குக்கப்பல் நேற்று முன்தினம் பகல் விபத்துக்கு உள்ளானதில் அக் கப்பலின் மேற்றளத்தில் இருந்த கவசவாகனம் கடலில் வீழ்ந்து மூழ்கியது.

அக்கப்பலில் பயணம் செய்த இரு படையினர் உயிரிழந்தனர்; இரு மாலுமிகளும் ஆறு படையினரும் காணாமற்போய் விட்டனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பில் இருந்து ஏற்றி வரும் பணியில் ஈடுபட்டுள்ள 'லங்கா முடித்த' கப்பல் கொழும்பில் இருந்து காங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மேயர் உடனடி நியமனம் இல்லை

கொழும்பு, ஒக். 12

யாழ். மேயர் பதவியை இப்போதைக்கு நிரப்புவது இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

எதிர்கால நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு கூட்டணி சார்பிலான மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். மாவட்ட கிளை உறுப்பினர்கள் ஆகியோருடன் ஆராய்ந்து அவர்கள் கருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

வவுனியா, ஒக். 12

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துவரும் தாக்குதல் சம்பவங்களையடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிதாக சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுற்றிவளைப்புத் தேடுதல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கூடுதலான படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## பிரதேசசபை உறுப்பினர் வீடு மீது கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு, ஒக். 12

ஏறாவூர் பிரதேச சபை ஐ. தே. க. உறுப்பினர் எம். அஹுனியாவின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது.

நகர் இருளில் மூழ்கி இருந்த நேரத்தில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## 172 மி. மீ. ஆட்லறிகள் புலிகளின் பாவனையில்

### படை அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஒக். 12

வன்னி யுத்தமுனையில் நீண்ட தூரம் செல்லக்கூடிய 172 மி.மீ. ஆட்லறிகளைப் புலிகள் பாவிப்பது தெரியவந்துள்ளது என்று படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வகையான ஆட்லறிகள் மூன்றை புலிகள் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது என்றும்—

அண்மையில் வன்னிக்குச் சென்ற இராணுவத் தளபதிகளுக்கு இந்த விடயம் பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நீண்டதூர ஆட்லறிகள் புலிகள் வசம் உள்ள விவகாரம் குறித்து இராணுவ உயர் மட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஆரையம்பதியில் 4 ரெலோ உறுப்பினர் நேற்று கிளைமோர் தாக்குதலில் பலி!

மட்டக்களப்பு, ஒக். 12

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதியில் நேற்று அதிகாலை 5 மணிக்கு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 4 ரெலோ உறுப்பினர்கள் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு வாவிப் பகுதியில் இவர்கள் இரவு காவல் கடமையை முடித்து விட்டு தமது முகாமுக்குக் கால் நடையாகத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இத்தத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்கள் பிரச்சினைகளில் அரசு அசமந்தப் போக்கு

### கூட்டணியின் பொதுச் சபை கண்டனம்

கொழும்பு, ஒக். 12

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தற்சமயம் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அதிருப்தி தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனமும் தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய பொதுச் சபைக் கூட்டத்தையடுத்து கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்சமயம் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தி 3 ஆம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கையை அரசு கருத்தில்கூட எடுக்கவில்லை.

செம்மணி புதைகுழி விவகாரத்தில் சட்ட, விஞ்ஞான உதவிகளை வழங்க ஐ. நா. தயாராக இருந்த போதும், அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

'லயன் ஏயர்' விமானம் கடலில் மூழ்கிய விவகாரத்தில் அரசு தலையிட்டு மீட்புப் பணிகளை மேற்கொள்ளாது பாராமுகமாக இருக்கின்றது.

வன்னி மக்களுக்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கோஷ்டி மோதலில் தமிழ் மாணவன் பலி!

### கொழும்பில் நேற்று சம்பவம்

கொழும்பு, ஒக். 12

கொழும்பில் உள்ள இரு பிரபல கல்லூரிமாணவர்களிடையே சனியன்று இடம்பெற்ற கோஷ்டிமோதலில் தமிழ் மாணவன் ஒருவர் உயிரிழந்தார்; ஆறு மாணவர்கள் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

சென். தோமஸ் கல்லூரியில் சனியன்று வாணிவிழா நடை பெற்றது. இதில் பங்குபற்றுவதற்காக பம்பலம்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களும் அங்கு சென்றிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சித் தாக்குதல்

## ஜனாதிபதி தலைமையில் நீண்ட நேரம் ஆராய்வு

கொழும்பு, ஒக். 12

கிளிநொச்சி, பரந்தன் தாக்குதல் தொடர்பாகக் கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு நாள்களும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடிய தேசிய பாதுகாப்புக் கவுன்சில் விரிவாக ஆராய்ந்தது.

இந்தக் கூட்டத்தின் முடிவுகள் மிக இரகசியமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டில் பலி!

### தாயார் காயமடைந்தார்

செம்பியன்பற்று, ஒக். 12

பளைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சுரேஸ் என அழைக்கப்படும் அந்தோனிப்பிள்ளை இராசமாணிக்கம் (வயது 23) என்ற இளம் குடும்பஸ்தரே மரண

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா பரமகுரு

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

பண்ணாகத்தைச் சேர்ந்த சின்னையா பரமகுரு நேற்றுக் காலமானார்.

அன்னார் அமிர்தவல்லியின் (ஓய்வுபெற்ற மருத்துவ மாது) கணவரும், காலஞ்சென்ற கணதேவகுரு, சிவானந்தகுரு (ஜேர்மனி), பரமானந்தவல்லி ஆகியோரின் தந்தையும், ஸ்ரீதரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12 - 10 -98) நண்பகல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ப. ஸ்ரீதரன்
(மருமகன்)

(சி/5160)

## நாகலிங்கம் ஞானசம்பந்தன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் ஞானசம்பந்தன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வழக்கறிஞர் வே. நாகலிங்கம், திருமதி நாகலிங்கம் ஆகியோரது மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் (முன்னாள் ஆசிரியர், சாவகச்சேரி, கொக்குவில் இந்துக் கல்லூரிகள்), திருமதி மயில்வாகனம் ஆகியோரது மருமகனும், சரஸ்வதிப்பிள்ளையின் (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், பிரதீப்குமார் (தீபன்), சுபனா, சாரங்கன், ஸ்ரீதர் ஆகியோரது தந்தையும், விஜிதா, திருமகன், ரூபா ஆகியோரது மாமனாரும், ஏரணன், வருணன் ஆகியோரது பாட்டனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சிவகாமசுந்தரி, பரமேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12 - 10 - 98) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 01 ஆம் இலக்க இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி

(சி/5157)

## கார்த்திகேசு ஐயம்பிள்ளை

வாணப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஐயம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர், சுன்னாகம், திருஞானசம்பந்த வித்தியாசாலை) 11-10-1998 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற வள்ளிப்பிள்ளை கார்த்திகேசுவின் புத்திரனும் சிவபூசணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற கு. இலட்சுமிப்பிள்ளையின் தம்பியும் கனகசபையின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அண்ணனும் கலாவாணி (கொழும்பு), சதியாவாணி (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), ஜெயவாணி (ஆசிரியை, வவுனியா), யமுனா (பிரான்ஸ்), முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குழந்தைவேல், பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் நவரட்ணம் (கொழும்பு), தயாளன் (பிரான்ஸ்), கதிர்காமநாதன், தேவராசா, கீதா, திருபராசா (சுன்னாகம்) ஆகியோரின் மாமனும் சுமதி (லண்டன்), நாகலோஜினி, நிரேஜினி, பரணிதரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஜனனி, நிராகுலன், விஷ்ணா, வசீஜிதன், அஷாரா, கிஷார் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. கனகசபை
(சகோதரன்)

'தேவவாசம்',
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். [59857]

## ஆறுமுகம் சம்பந்தர்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் 193, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சம்பந்தர் (கோண்டாவில் மகாவித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர்) 11-10-98 நேற்று காலமானார்.

இவர் திருமதி சு. நாகம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் ஜெயமகாராணி (கனடா), சர்வலட்சுமி இராசேந்திரம் (ஜேர்மனி), முருகானந்தன், சாந்தகுமார் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலா, சிவநாதன், சத்தியதேவன், இராஜேஸ்வரி, மனோரஞ்சினி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு. ஆ. செல்வரத்தினத்தின் (கொழும்பு) சகோதரரும் திருமதி சு. பத்மாவதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-98) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. சத்தியதேவன்
(மருமகன்)

193, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (59859)

# சம்பளம் இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 12

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த 25 ஆம் திகதி வழங்கப்படவேண்டிய சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தீபாவளி பண்டிகை நெருங்குவதால், சம்பளம் வழங்குவதில் இருந்து வரும் தாமதம் குறித்து ஊழியர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# கூரையில் இருந்து வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக். 12

வீடுவேயக் கூரையில் ஏறிய ஒருவர் கூரை மரம் முறிந்ததனால் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பித்துரை பத்மநாதன் (வயது 48) என்பவரே தலையில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# பெண் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 12

கிணற்றில் தண்ணீர் அள்ளியவேளை தவறி விழுந்த இளம் பெண் ஒருவர் கை முறிந்து காயமடைந்தார்.

கொக்குவில் கிழக்கில் நேற்று முன் தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் தர்மலிங்கம் நிரஞ்சனா (வயது 22) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# வலி. தெற்கில் 75 வீடுகள் அமைப்பு

சுன்னாகம், ஒக். 12

வலிகாமம் தெற்கில் 75 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஜேர்மன் தொழிநுட்பக் கூட்டுத்தாபனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் இவ் வீடுகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு வீட்டை அமைப்பதற்கும் ஓர் இலட்ச ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் வழங்கப்படுமெனவும்—

அவற்றைப் பயன்படுத்தி வீடுகள் அமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் குப்பிளான் தெற்கில் 6 வீடுகளும், குப்பிளான் வடக்கில் 10 வீடுகளும், புன்னாலைக் கட்டுவன் வடக்கில் 20 வீடுகளும், ஏழாலை வடக்கில் 19 வீடுகளும், ஏழாலை மேற்கில் 20 வீடுகளும் அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
மம்முட்டி - அஞ்சு
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
(ரீகல்)
நெஞ்சுஉருக்கும்காட்சிகள்
காட்சி: 10-30, 2-30
(59849)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி
மதுபாலா • ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் • நாஸர்
நடித்த
ரோஜா
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-30, 5-30
(புதிய நேரம்)
(இ/5020)

# வங்கிக் கடனை மீளச் செலுத்தாத தமிழ் எம்.பி!

கொழும்பு, ஒக். 12

முக்கிய தமிழ்க்கட்சி ஒன்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவரும் அரச வங்கி ஒன்றில் இருந்துபெற்ற 3 கோடி 50 லட்சம் ரூபாவை மீளச்செலுத்தவில்லை எனக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதில் 3 கோடி ரூபாவை அந்த நாடாளுமன்ற உறுப்பினர் வங்கியில் இருந்து கடனாகப் பெற்றார் எனவும் அந்தக் கடனுக்கான போதிய பிணையை அவர் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வழங்கப்பட்ட கடனை அறவிடுவது தொடர்பாக அந்த வங்கி பல ஞாபகமூட்டும் கடிதங்களை அனுப்பி வைத்த போதும் பயன் ஏதும் கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடனைப் பெறுவதற்காக அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பெறுமதியற்ற காணிகளின் உறுதிகள் சிலவற்றைப் பிணையாக ஒப்படைத்துள்ளாராம்.

சலுசலாவின்
தீபாவளி விசேட விலைக் கழிவு

எம்மிடம்
▼ காற்சட்டைத்துணி ▼ சேட்டிங்
▼ சாறிவகைகள ▼ ஜன்னல் திரைச்சீலை
▼ பெண்கள் சிறுவர்களுக்கான தைத்த ஆடைகள் ▼ வேட்டி ▼ படுக்கை விரிப்பு
▼ சீத்தை ▼ பப்பிளின் ▼ பொலியஸ்ரர்
போன்றவை மலிவு விலையில் பெறலாம்.
மேலும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் 5% வியாபாரக் கழிவு வழங்கப்படும் என்பதை பெரு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
சலுசல
Salu Sala
லங்கா
சலுசல லிமிட்டெட்,
19, 20, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(59860)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரிபூரணம் வேலுப்பிள்ளை

சாவகச்சேரி, நுணாவில் கல்வயல் வீதியைச் சேர்ந்த திருமதி பரிபூரணம் வேலுப்பிள்ளை நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், குமாரசாமி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லத்துரை, சின்னத்தங்கம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலா (ஆஸ்திரேலியா), பாலசுப்பிரமணியம் (கனடா), பாலச்சந்திரன், தவமணி (ஆஸ்திரேலியா), திலகவதி (ஆஸ்திரேலியா), தயாளன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம் (ஆஸ்திரேலியா), சாவித்திரி (கனடா), கோசலா, மாணிக்கவாசகர் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (ஆஸ்திரேலியா), பாரதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஞ்சலி, யசோதா, ஹரிசுதன், தர்மினி, தர்சன் (சிவா), சிவகரன், பரணிதரன், சுபாஸ்கரன், பாஸ்கரன், மயூரன், மாதவன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-10-98) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
வே. பாலச்சந்திரன்
(மகன்)

71, நுணாவில் கல்வயல் வீதி,
சாவகச்சேரி. (59861)

## அந்தோனிப்பிள்ளை இராசமாண்சிங் (சுரேஸ்)

(உரிமையாளர், விஜி களஞ்சியம், பளை)

இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இராசமாண்சிங் (சுரேஸ்) 10 - 10 - 98 இல் அகால மரணமானார்.

அன்னார் திரு திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் மகனும், மாலாவின் அன்புக் கணவரும், சுபாஷ்சந்திரபோஸ், இடியமின், லலிதா ஆகியோரின் அன்புச்சகோதரனும், த. ஜெயந்தனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பளையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தனபாலசிங்கம்

கண்டி வீதி,
பளை. (59853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு பிறக்கும்போது விண்ணில் கண்கவர் வாணவேடிக்கை நடத்த திட்டம்

## விண்கலத்தின் உதவியுடன் ரஷ்யா ஏற்பாடு

மொஸ்கோ, ஒக். 12

2 ஆயிரமாம் ஆண்டு பிறக்கும் போது விண்வெளியில் இருந்து உலகின் முக்கிய நகரங்கள் மீது மத்தாப்பூ பூக்களைப் பொழிவதற்கும், வாணவேடிக்கைளை நிகழ்த்துவதற்கும் ரஷ்ய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கென விண்கலம் ஒன்றை முன் கூட்டியே திட்டமிட்டு அனுப்ப ஆயத்தங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

நூற்றாண்டு கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரியானசேர்கி கோட்டுனோவ் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

வாண வேடிக்கைகளையும், ஒளி வெள்ளத்தையும் ஏற்படுத்தக்கூடிய ரொக்கெட் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளது.

100 கிலோகிராம் எடையுடைய தனித் தனியான வாணவேடிக்கைப் பொருள்கள் அடங்கிய 5 பரசூட்டுகள் இந்த ரொக்கெட்டில் இணைக்கப்பட்டிருக்கும்.

1999 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் காலத்தில் அல்லது 2 ஆயிரமாம் ஆண்டு மலரும் சமயத்தில் உலகின் 5 முக்கிய நகரங்களின் வான் பரப்பில் இந்த வாணவேடிக்கை நிகழ்த்தப்படும். கோடிக்கணக்கான மக்கள் இதனைக் கண்டு களிக்கமுடியும். பல வர்ண முகில் கூட்டங்களையும் இந்த ரொக்கெட் வானில் ஏற்படுத்தும். (ஐ)

**வெளிநாட்டுக்கு**

## கடத்தப்படவிருந்த 21 குழந்தைகள் மீட்பு

டாக்கா, ஒக். 12

டாக்காவிலிருந்து வெளிநாடுகளுக்குக் கடத்தப்படவிருந்த மியான்மர் நாட்டைச் சேர்ந்த 21 குழந்தைகளை பங்களாதேஷ் பொலிசார் கடந்த வாரம் மீட்டனர்.

இது தொடர்பாக 4 பெண்கள் உட்பட 8 பேரைப் பொலிசார் கைது செய்தனர். குழந்தைகளின் தாய்களைப் போல் அந்தப் பெண்கள் நடித்தனர் என்று பொலிசார் கூறினர்.

டாக்காவிலுள்ள ஹோட்டலில் பொலிசார் ஞாயிற்றுக்கிழமை சோதனை நடத்தினர். அப்போது ஓர் அறையில் அடைத்து வைக்கப்பட்டு இருந்த இக் குழந்தைகள் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டனர்.

சர்வதேச அளவில் செயற்படும் ஆள் கடத்தும் கும்பல்களின் ஏஜென்டுகள் இக் குழந்தைகளைக் கடத்தி வந்து அங்கு தங்க வைத்திருந்தனர்.

(ஐ)

**மான் வேட்டை**

## நடிகை தபு உட்பட மூவர் கைதாகி பிணையில்

புதுடில்லி, ஒக். 12

வட இந்தியாவின் உள்ள பாலைவன மாநிலமான ஜோத்பூரில் இந்திய திரைப்பட முன்னணி நடிகை தபு உட்பட மூன்று பேர் மான் வேட்டையாடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வேட்டையின் போது இரு மான்களைக் கொன்று விட்டார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தபு, சோனாலியாபாற்றே, ஜீனம் ஆகிய இந்தி நடிகைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மாலை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதே மான் வேட்டையில் சல்மான்கான், சாயில் அலிகான் ஆகிய இந்தி நடிகர்களும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும் அவர்கள் முன்னரேயே நீதிமன்றில் பிணை அனுமதி பெற்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

**யூகோஸ்லாவியா மீது**

## 'நேட்டோ' விமானத்தாக்குதல் எந்நேரமும் நடைபெறலாம்

**உலக அரங்கில்**

பெல்கிரேட், ஒக். 12

கோசோவோ விவகாரம் தொடர்பான சமரச முயற்சிகள் தோல்வியடைந்து வருவதைத் தொடர்ந்து யூகோஸ்லாவியா மீது 'நேட்டோ' விமானத்தாக்குதல் எந்நேரமும் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கத் தூதுவரான கோல் புறூக் பெல்கிரேட்டுக்கும், பிறிஸ்ரினாவுக்கும் இடையே மாறி மாறிப் பயணம் செய்து மேற்கொண்ட ராஜதந்திர முயற்சிகள் உரிய பலனளிக்கவில்லை.

கோசோவோவுக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த ஐ.நா. முயன்று வருகிறது.

இதேவேளை யூகோஸ்லாவிய நிலைகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்த 'நேட்டோ' விமானங்கள் தயாராக நிறுத்தப்பட்டுள்ளன. (ஐ)

## உணவுப் பொருள் தரம் குறித்துப் பரிசோதனை

குளங்கள் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்கள் பழுதடைந்தவையாக இருப்பதாகச் செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து தெல்லிப்பழைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உடுவில் சமநல சேவை கேந்திர நிலையத்துக்குச் சென்று பரிசோதனைகளில் ஈடுபட்டார். அப்போது அங்கிருந்த பொருள்கள் பாவனைக்கேற்றவையாக இருப்பதாகக் காணப்பட்டன. அவை மக்கள் பாவனைக்கேற்றவை என்று அவர் சிபாரிசு செய்துள்ளார். இருப்பினும் அங்கு காணப்பட்ட உலர் உணவுப் பொருள்களின் பாவனைக் காலம் விரைவில் முடிவடைய இருப்பதால் அவற்றைத் தாமதமின்றிப் பயன்படுத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-152)


தென்னிந்திய திருச்சபை

யாழ். பேராயம் நடத்தும்

**இலவச வைத்திய சேவை**

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை

திங்கள், வியாழன் ஆகிய நாள்களிலும்

இணுவில் மக் லியோட் வைத்தியசாலை

செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களிலும்

பிற்பகல் 2. 00 மணி முதல் 4. 30 மணி வரை நடைபெற்று வருகின்றது.

எஸ். கே. செல்வராஜா

நிர்வாக செயலர்.

(59851)


## எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கூட்டணி அரசியல் குழு கூடி ஆராய்வு

கொழும்பு, ஒக். 12

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள கூட்டணித் தலைமையகத்தில் ஒன்று கூடி தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும், கூட்டணியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் நீண்ட நேரம் ஆராய்ந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற மேற்படி மத்திய பொதுச்சபைக் கூட்டத்தில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கூட்டணி பொதுச்சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டம் காலை 10 30-க்கு ஆரம்பமாகி ஆறுமணிவரை நடைபெற்றது. பிரதானமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென அரசை நிர்ப்பந்திப்பது, புலிகளுடன் சாத்தியமானமுறையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென அரசைக்கோருவது, மற்றும் செம்மணி விவகாரத்தில் தக்க நடவடிக்கைகள் எடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசு உதவவேண்டுமெனக் கோருவது தொடர்பான விவகாரங்கள் பொதுச்சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் உத்தியோகபூர்வமாக தீர்மானமெதுவும் நிறைவேற்றப்படவில்லையெனவும் பொதுச்சபை மீண்டும் இரு வாரங்களின் பின்னர் கூடி தீர்க்கமான முடிவெடுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## இலங்கைப் பணிப் பெண் ஜோர்தானில் தற்கொலை

அம்மான், ஒக். 12

ஜோர்தான் தலைநகர் அம்மானில் வீட்டுப்பணிப் பெண்ணாக வேலைபார்த்து வந்த இலங்கைப் பெண் ஒருவர் சுருக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஜோர்தானியர் ஒருவரின் வீட்டு மாடியில் இருந்து கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு ஜன்னல் வழியே வெளியே குதித்து இவர் தற்கொலை செய்துள்ளார் என ஜோர்தான் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

மாடியில் தொங்கியவாறு இருந்த சடலத்தைக் கண்ட வீதியில் சென்ற பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் சடலத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தியதுடன் இது தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-6)


## கண்ணீர் அஞ்சலி

### அந்தோனிப்பிள்ளை இராசமாண்சிங்

(சுரேஸ்)

விஜி களஞ்சிய உரிமையாளர், பளை.

10—10—98 இல் அகால மரணம் அடைந்த அந்தோனிப்பிள்ளை இராசமாண்சிங்கிற்கு (சுரேஸ்) எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

பளை வர்த்தகர்கள்

கண்டி வீதி,

பளை. (59854)


## வாய்க்கால் திருத்தம்

சுன்னாகம், ஒக். 12

அளவெட்டி அம்பனை வயலில் இருந்து பினாக்கைக் குளத்தை அடையும் வழுக்கியாற்று வாய்க்கால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பற்றைகள் மூடிப் படர்ந்து தூர்ந்து போயிருந்த இவ் வாய்க்கால் திருத்தப் பட்டமையால் மழைநீர் தேங்குவது தடுக்கப்பட்டிருக்கிறது.

அளவெட்டி விவசாய சம்மேளனம் இத்திருத்த வேலையைப் பொறுப்பேற்றுச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)


## அறிவித்தல்

**வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்**

20, நவீனசந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம்.

தீபாவளியை முன்னிட்டு சிகை அலங்கரிப்பு நிலையங்கள் எதிர்வரும் 14 - 10 - 98 புதன்கிழமை திறக்கப்பட்டு 19 - 10 - 98 தீபாவளி அன்று அனைத்து சிகையலங்கரிப்பு நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

K. இரத்தினராஜா — உப தலைவர்

க. சிறீராஜன் — செயலாளர்

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

(59850)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணிகள் விற்பனைக்கு

மீசாலை வடக்குப் பகுதியில் கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான கிணறு கட்டடங்களுடன் கூடிய 20 பரப்பு தென்னங்காணியும், கிணறு கட்டடங்களுடன் கூடிய 5 பரப்புக் காணியும் இரு காணிகளும் அருகருகே அமைந்துள்ளன விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி. (C/5144)

### SPOKEN ENGLISH

கலபமாக இலக்கணம் இன்றி ஆங்கிலத்தில் பேசப் பயில (புதிய பிரிவு 17-10-98 சனி மாலை 2. 30) மாணவர்கள் திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் பதிவு செய்யவும். 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (59846)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணமா? கொழும்பா எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கும் 7 நாடகங்களும் 4 கட்டுரைகளும் 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. படிக்கவும் நடிக்கவும், பரிசளிக்கவும் ஏற்றவை 50/-. (59622)

## மிதிவெடி சோதனை

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். போதனாவைத்தியசாலை கண்பரிசோதனை நிலைய வாயிற்பகுதி நேற்று முன்தினம் இராணுவத்தினரால் மிதிவெடி பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

கடந்த வாரம் இந்தப் பகுதியில் இருந்து மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டதை அடுத்தே, இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பரிசோதனையின் போதுஅப்பகுதியில் மிதிவெடி எதுவும் கண்டெடுக்கப்படவில்லை. (ஐ-15-139)


விற்பனையாகின்றன!

G. C. E. O/L - 1998

துரிதமீட்டலுக்கான

வரலாறு, சமூகக்கல்வி நூல்கள்

ஆண்டு 9, 10, 11

ஆக்கம்: நா. மயில்வாகனம்
B. A. (Ceylon) (Modern History)
முன்னைய ஆசிரியர் பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

மொத்தமாகப்பெற:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
(59777) யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சின்னத்துரை பாறுபதி**
(பப்பா)

தோற்றம் 05-05-1915 — மறைவு 23-09-1997

திதி: 12 - 10 - 1998

எங்கள் குடும்ப விளக்கே, பாசமுடன் எமைக் காத்த அன்புத் தெய்வமே! புன்னகை பூத்த உன் முகத்தை இனி என்று நாம் காண்போமோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்.

'விங்கம்ஸ்',
கரணவாய் தெற்கு. (59848)

## லயன்ஸ் கழகத்தின் புற்றுநோய் கொடித்தினம்

யாழ்ப்பாணம், ஒக். 12

நாட்டில் புற்றுநோயாளர்களுக்கு உதவுவதற்காக லயன்ஸ் கழக 306 'பி' மாவட்டத்தின் பிராந்தியம் 8 இன் 'புற்றுநோய் கொடித்தினம்' கடந்த வியாழனன்று நல்லூர் ஆனந்த வித்தியாசாலையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். லயன்ஸ் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்விற்கு யாழ். லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஆர். பரநிருபசிங்கம் தலைமை வகித்தார்.

லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளர் லயன் ஏ. தங்கேஸ்வரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொடி விற்பனையை ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக பிராந்தியத் தலைவர் லயன் எஸ். எஸ். அருளம்பலம் கலந்து கொண்டார்.

லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் வேலைத் திட்டத்தை ஒட்டி ஆனந்த வித்தியாசாலை மாணவர்களுக்கு லயன் ஆர். பரநிருபசிங்கம் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்தார். (ஐ)

## ஜி. சீ. ஈ. மாணவருக்கு அ. அட்டை வழங்கல்

கொழும்பு, ஒக். 12

இவ்வாண்டு ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக ஆள்பதிவுத் திணைக்களம் விசேட ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப்பரீட்சைக்கு சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர் எனவும் இவர்களில் 60 சத வீதமானோரே அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் எனவும் ஆள் பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எஞ்சிய பரீட்சார்த்திகள் தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாள அட்டைகளைப்பெற உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6-10)

## ஆஸ்பத்திரிக்குள் குழப்பம் செய்தாராம்

### பொலீஸாரால் ஒருவர் கைது

மரண விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் சாராயப் போத்தலுடன் மது போதையில் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்ததாகக் கூறப்படும் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் மந்திகை ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:

கடந்த 5 ஆம் திகதி நெல்லியடிப் பகுதியில் தனக்குத்தானே தீ மூட்டி உயிரிழந்த வயோதிப மாது ஒருவரின் மரண விசாரணை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவானும், மரண விசாரணை அதிகாரியுமான ஏ. கே. நடராஜா தலைமையில் மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

அப்போது திடீரென மரண விசாரணை அதிகாரியின் அலுவலகத்துள் நுழைந்த ஒருவர் தான் வைத்திருந்த சாராயப் போத்தலைக் காட்டி தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும்—

மேற்படி நபரான மந்திகையைச் சேர்ந்த செல்லையா இராமகிருஷ்ணனை (வயது 43) 2 வாரங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-109-7)


## சாவகச்சேரி நகரசபை

## 1999 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01 - 01 - 1999 தொடக்கம் 31 - 12 - 99 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் / சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 27 - 10 - 98 ஆம் திகதி மு.ப. 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் அன்றைய தினமே மு.ப. 11-00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்பு கட்டணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 1. ஆட்டிறைச்சிக் கடை என். எம். எஸ். | 1 | 93,000-00 | 1,000 | 500 |
| 2. ஆட்டிறைச்சிக் கடை என். எம். எஸ். | 2 | 1,06,000-00 | 1,000 | 500 |
| 3. மாட்டிறைச்சிக் கடை என். எம். எஸ். | 3 | 95,000-00 | 1,000 | 500 |
| 4 மாட்டிறைச்சிக் கடை என். எம். எஸ். | 4 | 1,07,000-00 | 1,000 | 500 |
| 5. குப்பைகூளங்களை அகற்றும் உழவு இயந்திரம் / லான்ட் மாஸ்ரர் பெட்டியுடன் வாடகைக்கு விடுதல் | | | 1,000 | 500 |

மேற்படி வைப்புப் பணம், கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்துவதன் பேரில் 23 - 10 - 98 ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டா.

சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 07 - 10 - 98 (சி-5148)



## WANTED FOR UNDP / JRRP

1. COMPUTER TRAINERS

UNDP / JRRP requires the services of Computer trainers for Training Assistance in JRRP funded training school to train about 20 students.

The candidates should have good knowledge of English, computer competency, Windows Environment & Software.

The selected candidates will be sent to Colombo for 3 — 4 weeks training in MS applications before taking on assignments in Jaffna.

2. PRA TRAINING ASSISTANTS

JRRP is developing local Participatory Rural Appraisal (PRA) capacity for Jaffna and invites application from young graduates.

Outside experts will be brought in to train a core team of approximately 6 selected candidates in this skill. Successful trainees will go out to assist projects in local planning around Jaffna district.

Candidates should be fluent in English, willing to travel, meet people and listen.

Send your CV's to UNDP / JRRP,
125, Temple Road,
Jaffna,
before 17th of October. (59818)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர் சேவை மூலம் வவுனியாவில் கடவுச்சீட்டு

கொழும்பு, ஒக். 12

வவுனியா மாவட்ட மக்களும் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களும் கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கு ஏதுவாக குடிவரவு குடியகல்வு அமைச்சு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெயர் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

இச்சேவை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

இதன் போது புதிய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வது, கடவுச்சீட்டை மாற்றுவது, மத்திய கிழக்குக் கடவுச்சீட்டை ஏனைய நாடுகளுக்கும் செல்லும்படியாக்குவது, கடவுச்சீட்டைப் புதுப்பிப்பது, அதில் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வது தொலைந்த கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வது ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விவரங்களை தமது பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-6)

# பெண் உட்பட மூவர் கத்தி வெட்டுக்கு இலக்கு

## மிருசுவிலில் சம்பவம்

தென்மராட்சி, ஒக். 12

மிருசுவில் கெற்பலிப் பகுதியில் இடம்பெற்ற இரு பகுதியினருக்கிடையிலான மோதலில் ஒரு பெண் உட்பட மூவர் கத்தி வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர்.

கடந்த புதன்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். குணனேஸ்வரி (வயது 37), கே. சுந்தரலிங்கம் (வயது 43), த. இராசா (வயது 64) ஆகியோரே வெட்டுக்காயங்களுக்கு இலக்கானவர்களாவர்.

(ஐ-117-15)

# பாலியல் துஷ்பிரயோகம் அதிபர் விளக்கமறியலில்

கொழும்பு ஒக். 12

நீர்கொழும்பிலுள்ள கனிஷ்ட பாடசாலை ஒன்றில் கல்விகற்ற 10 வயதுடைய மாணவிகள் சிலரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்தப் பாடசாலை அதிபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் 15ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் நீர்கொழும்பு மாவட்டமேல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி இந்தப்பாடசாலை அதிபர் பற்றி மருத்துவ அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்கள் என்று நம்பப்படும் சில மாணவிகள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் —

அவர்களில் ஒருவர் பாலியல் தொடர்பு மூலம் நோய்க்கு ஆளாகியது தெரியவந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

# உரவகைகள் விலையேற்றம்

தென்மராட்சி, ஒக். 12

அண்மையில் கப்பலில் கொண்டுவரப்பட்டு கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட யூரியா உரத்தின் விலை முப்பது ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யூரியா உரங்கள் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வந்துள்ள போதிலும் அதிகரிக்கப்பட்டுள்ள விலை விவரப்பட்டியல் வந்து சேராததால் அவை இன்னமும் விற்பனை செய்யப்படாமல் உள்ளதாகவும் தெரியவருகிறது.

தற்போது அந்தர் 470 ரூபாவாக விற்பனை செய்யப்படும் யூரியா இனி 500 ரூபாவாக விற்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

(ஐ-117)

# வெள்ளைப் பிரம்பு தினம்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம் எதிர்வரும் 16ஆம்திகதி வெள்ளிக்கிழமை யாழ். லயன்ஸ் கழகத்துடன் இணைந்து வெள்ளைப் பிரம்பு தினத்தைக் கொண்டாடவுள்ளது.

(ஐ-6)

# வெற்றிலை விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். குடாநாட்டுப் பகுதியில் வெற்றிலையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

உள்ளூர்வெற்றிலை உற்பத்தி பாதிப்படைந்த நிலையில் கொழும்பில் இருந்தே வெற்றிலை இறக்குமதி செய்யப்பட்டு குடாநாட்டின் பாவனைக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது.

விமான மூலமே இந்த வெற்றிலை விநியோகம் இடம்பெற்று வந்தது. தற்போது விமானசேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து வெற்றிலையின் இறக்குமதியிலும் தடை ஏற்பட்டதை அடுத்தே வெற்றிலையின் விலை அதிகரித்து வருகிறது.

75 சதம் விற்ற ஒரு வெற்றிலை தற்போது 3 ரூபா வரை விற்கப்படுகிறது.

(ஐ-15-173-117)


## கேதார கௌரி விரத பூசை

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள
**சிவன் கோவிலில்**
20 — 10 — 1998
புதன் காலை 8மணி தொடக்கம் 10-30 மணிவரை
கௌரி காப்புகள் வழங்கப்படும்.
சுபம்.
சி. பரமேஸ்வரன்
(59815)

## வாழ்த்துகின்றோம்

இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம் கலைஞர்
அறிஞர் கௌரவிப்பு விழா நாயகன்
**திரு. சி. மகேந்திரன்** அவர்கள்
'லயஞான வாரிதி' மிருதங்க விரிவுரையாளர்,
யாழ். இராமநாதன் நுண்கலைப்பீட வளாகம்,
மருதனார்மடம்.
S. இந்திரன்.
மிருதங்கத் தொழிலகம்,
புகையிரத மேல் மாடி.
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
(59833)

## அன்னையை வாழ்த்துகின்றோம்

பல கலைகள் கற்று, பாரினிலே பண்பான
சேவை புரிந்து, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும்
அருட்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு
கௌரவ கலாநிதி விருது
வழங்கியமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
(சி/5149)

## தமிழ்ச் செல்வியை வாழ்த்துகின்றோம்

சைவமும் தமிழும் என்றும் நிலைத்து நிற்க
தன்னலமற்ற சேவை புரியும்
செந்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**,
அவர்களுக்கு
'கலாநிதி' விருது வழங்கி
கௌரவிக்கப்பட்டமையையிட்டு
உளமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஐயனார் தேவஸ்தானம்,
சுன்னாகம்.
(59839)

யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
## சேவை நலன் பாராட்டும் வரவேற்பும்

காலத்தால் அழியாத கல்விச் செல்வத்தை
ஞாலத்தில் நன்கு வேரூன்றச் செய்வதற்குச்
சிறப்பான முறையில் அளப்பரிய சேவை புரிந்த
முன்னாள் கல்விப் பணிப்பாளர் [வலயம் - 1]
உயர்திரு.
**நா. சுந்தரலிங்கம்**
அவர்களது
உன்னத சேவையைப் பாராட்டி வாழ்த்துக் கூறி
புதிய கல்விப் பணிப்பாளர்
கலாநிதி
**நா. தணிகாசலம்பிள்ளை**
அவர்களையும்
வருக வருக என்று வரவேற்று வாழ்த்துக்கள்
தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யாழ். இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை.
(சி-5141)

## பாராட்டுகின்றோம்

சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும்
அரும் பெருந் தொண்டாற்றிய
கலாநிதி
**அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களையும்
கருங்கல், தாம்பர சிற்பத்தில் சிகரமென விளங்கும்
**சிற்பகலாபானு சு. பாஸ்கரன்**
அவர்களையும்
பல்லாண்டு வாழ வாழ்த்திப் பாராட்டுகின்றோம்
இத்தியடி வீரகத்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபையினரும்,
அடியார்களும்.
(சி-5153)

## தீபாவளி விசேட மலிவு விற்பனை

12-10 98 தொடக்கம் 18-10-98 வரை டிசைன் ஜோஜோ முன்னைய விலை ஒரு மீற்றர்
150 ரூபா. இப்போது 50 ரூபா கழித்து 100 ரூபாவிற்கு விற்கப்படும்.
உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள். மற்றும் சகல விதமான புடைவைத் தினுசுகளும்
விலை குறைத்து விற்கப்படும். வந்து பெற்றுக் கொள்ளலாம்.
**த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்**
21, மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(59797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு |
|---|---|
| 18 | 16 |
| 01 | 07 |
| 1975 | 1998 |

திருமதி
## சதீஷா ஜெயக்குமார்

என் பாச மகளே! சதீஷாவே!
இன்பம் பல தந்து நின்றாய்
இருபத்தி மூன்று வயதினிலே
திருமணத்திறகாய் சென்று நின்றாய்
டென்மார்க் செல்வதற்கு
கண்டியிலே காத்து நின்றாய்
காமுகர் கையாலே
கழுத்திறுக்கி சாகடித்தாய்!
காலங்கள் பல சென்றாலும்
ஆறாதம்மா உன்துயரம்.

உன் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

எம், எஸ்: லேன், கோண்டாவில்: (59789)

# 31 ஆம் நாள் நினைவுதினம்



| அன்னை மடியில் | ஆண்டவர் அடியில் |
|---|---|
| 03 | 12 |
| 10 | 09 |
| 1936 | 1998 |

அமரர்
## பெனடிற் வின்சென்ற்

(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

அன்பின் உருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
எம்மைப் பாசத்துடன்
வழி நடத்திச் சென்ற
உங்கள் நினைவுகள்
எமது மனதைவிட்டு
அகலாது! தங்களது
தூய அன்பை நினைவு கூருகின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

'புஸ்பவாசா',
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (59799)

# 7வயது சிறுவன் குண்டு வெடிப்பில் பலி

மட்டக்களப்பு, ஒக்: 12

மட்டக்களப்பு காத்தான் குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவ மொன்றில் 7 வயது) சிறுவன் ஒருவன்பலியானார்.

வீதியில் காணப்பட்ட பொருள் ஒன்றை வீட்டுக்கு எடுத்துச் சென்று விளையாடிய போது அப்பொருள் வெடித்தது என தெரிவிக்கப்படுகின்றது.

பலியான சிறுவன் பாருக் பவான் (7 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சிறுவனின் சகோதரன் பாருக் பஸ்லி (12 வயது( ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(இ-21)

# நல்லூரில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக்: 12

நல்லூர் கந்தசுவாமி ஆலய பகுதியில் வைத்து இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளியன்று படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்புத்துரை குணரத்தினம் (வயது 33, நல்லூர்) என்னும் இளைஞரே படையினரால் கைது செய்யப்பட்டவராவார்.

இவரின் கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

(இ-15-5)


**BOSCO**
25, நக்கா றோட்

SPOKEN ENGLISH
Grammar Classes
By: BRITTO

பிரிவு I 14-10-98
4-00 – 5-00 மணி
பிரிவு II 17-10-98
5-00 — 6-00 மணி
(59845)



**Dr. அல்போன்ஸ் அத்தனாசியார்**
(சில்லாலை)

மருந்தெண்ணெய் வகைகள்,
கோரோசனை மாத்திரை வகைகள்
என்பனவற்றை 70/2,
பழையபூங்காவீதி
கொய்யாத்தோட்டம்
சந்தி என்ற முகவரியில்
பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி
கமலினி ரஞ்சன்
(59834)


## Green Memorial Hospital
Manipay.
## Mc Leod Hospital
Inuvil.

தென் இந்திய திருச்சபை யாழ். பேராயத்தின் கீழ் இயங்கும், மானிப்பாய் கிறீன் வைத்திய சாலையும், இணுவில் மக்லெவுட வைத்தியசாலையும் தங்கள் 150 ஆண்டுகள் சேவையையும், 100 ஆண்டுகள் சேவையையும் நினைவு கூரும் முகமாக வாரத்தில் இரண்டு முறை இலவச சிகிச்சையை மக்களுக்குக் கொடுத்து வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Dr. C. Ambalavanar.
Medical Superintendent.

(59821)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யோகமணி பாலகுமார்
அவர்களின் தந்தை

## அமரர் வாரித்தம்பி நடராசா

அவர்கள் மரணமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி,
கரவெட்டி,

(சி - 5145)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பு | அரக்கன் அழிப்பு |
|---|---|
| 05 | 12 |
| 12 | 10 |
| 1970 | 1987 |

செல்வன்
## இராஜநாயகம் ராஜராஜன்

[ராஜ்]
(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்)

உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம் மகனே!
நினைவிலும் கனவிலும் அழியாத காவியமாய்
பாரதனில் மலர்ந்திட்ட எங்கள் மகனே!
ஏன் பறந்திட்டீர் பாரைவிட்டு?
உம் அன்னை உண்ணாமல் உம் பிரிவால் வாடுகிறாள்.
சாந்தி!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும்!
அம்மா, அப்பா, அண்ணா.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (59787)


## தென்மராட்சி மக்களுக்கொரு தீபாவளி நற்செய்தி!

தென்மராட்சி மக்களின் எண்ணற்ற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற சாவகச்சேரி

# வாணி ரெக்ஸ் நிறுவனத்தாரின் மாபெரும் விசேட மலிவு விற்பனை

தீபாவளித் திருநாளை முன்னிட்டு

**11 - 10 - 98 தொடக்கம் 20 - 10 - 98 வரை 10 வீத விசேட கழிவு**

உண்டு என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

| வாணி ரெக்ஸ் | வாணி பிளவுஸ் சென்ரர் |
|---|---|
| இல. 11, நவீன சந்தை, | இல. 05, மேல்மாடி, |
| சாவகச்சேரி. | சாவகச்சேரி. |

(சி/5151)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நுகர்வோர் பாதுகாப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுகர்வோர் பாதுகாப்பு தக்க முறையில் உறுதி செய்யப்படாமை குறித்து உதயன் வாசகர் ஒருவர் கவலை தெரிவித்திருக்கிறார்.

நுகர்வோர்களுக்கு உள்ள உரிமைகள் குறித்த விவரங்கள் மற்றும் தகவல்கள் குடாநாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியாது என்றும், நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வு உண்டாக்கப்படவில்லை என்றும் அவர் சரியாகத் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் மத்தியில் போதிய விழிப்புணர்வும், தமக்கு உள்ள உரிமைகள் பற்றிய அறிவும் குறைந்திருப்பதால் வர்த்தகர்கள் பிரதானமாகத் தமக்கு வசதியாக பாவனைப் பொருள்களின் விலைகளை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். அதனைச் சரிப்படுத்துவதற்காக பல நியாயங்களையும் காரணங்களையும் காட்டுகிறார்கள்.

தாம் விலை கொடுத்து வாங்கும் பொருள் தரமானதாகவும், உரிய நிறை உடையதாகவும், பாவனைக்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும் என்று நிச்சயப்படுத்தும் உரிமை பாவனையாளர்க்கு உண்டு. தரம், குறைந்த, நிறை குறைந்த, பாவனைக்கு உதவாத பொருள்களை விற்றவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்குச் சட்ட வசதிகள் உள்ளன.

பாவனையாளர்களுக்குப் பாதிப்புத் தரவல்ல நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பதற்கான செயல முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகைய செயல் முறைகளில் ஈடுபட வேண்டிய பொறுப்பு வர்த்தகத் திணைக்களத்துக்கே உண்டு.

ஆனால் குடாநாட்டில் நகரத்தில் மட்டுமே நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் ஒன்று இயங்குகிறது. ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளின் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் உருப்படியாக பயனுள்ள வகையில் இயங்குவதாகத் தகவல் இல்லை.

போரின் காரணமாகவும் வேறு பிற உப காரணங்களாலும் இலங்கை முழுவதிலும் பாவனைப் பொருள்களின் விலைவாசிகள் நாளாந்தம் உயர்ந்த வண்ணமே உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ நிலைமை மேலும் மோசம். பாவனைப் பொருள்கள் பலவும் கொழும்பு விலைகளை விட இரண்டு மடங்கு அதிகமாகவே உள்ளன.

அது மட்டுமன்று மனித பாவனைக்கு உதவாத நாள்பட்ட உணவுப் பொருள்கள் மற்றும் குறுகிய காலத்தில் பழுதடையும் பாவனைப் பொருள்களுக்கு இங்கு குறைவில்லை.

இவை குறித்த அரச இயந்திரத்தின் கண்காணிப்பு இன்னும் திருப்திகரமானதாக இல்லை. ஆகையால் பாதிப்புகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும், பகிஷ்கரிப்புப் போன்ற நடவடிக்கைகளில் இறங்குவதற்கும் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் சுறுசுறுப்படைய வேண்டும். மக்கள் மத்தியில் இது சம்பந்தமான விழிப்புணர்வைக் கொண்டு வருவதும் அவசியம்.

# வருட இறுதிக்குள் படைக்கு மேலும் 20 ஆயிரம் பேர் சேர்க்கப்படுவர்!

## 'வெற்றி உறுதியை' தீவிரமாக்க முடிவு

கொழும்பு, ஒக். 12

வருட இறுதிக்குள் இருபதாயிரம் பேரை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கையில் இராணுவத் தலைமையகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை அடுத்த ஜனவரி மாதம் முதல் தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதற்காகவே இராணுவத்திற்கு புதிதாக இருபதாயிரம் பேரைச் சேர்த்துக்கொள்ளவிருப்பதாக இராணுவத்தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் கடற்படையின் பலத்தை அதிகரிக்கும் வகையில் யுத்தக் கப்பல்களையும், அதிவேக பீரங்கிப் படகுகளையும் சீனாவில் இருந்து கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஐ-10)

## ஜேர்மன் சின்னமுத்து நோய்த் தடுப்பு ஊசி

சண்டிலிப்பாய், ஒக். 12

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் சின்னமுத்து நோய்த் தடுப்பு ஊசி மருந்து 11 வயதுக்கும் 15 வயதுக்குமிடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு போடப்பட்டு வருகின்றது. கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் இந்தத் தடுப்பு ஊசி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரால் இப்பிரிவுப் பாடசாலைகளில் போடப்பட்டு வருவதாகத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி, அலுவலக பொறுப்பதிகாரி நா. சதாசிவம் தெரிவித்தார். (ஐ-135)

## வலிகாமம் தெற்கில் சிறுவர், முதியோர் தின நிகழ்ச்சிகள்

வலிகாமம் தெற்கு, ஒக். 12

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தின, சர்வதேச முதியோர் தின நிகழ்ச்சிகள் கடந்த 7 ஆம் 8 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றன.

7 ஆம் திகதி புதன்கிழமை காலை பிரதேச செயலர் சு. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற சிறுவர் தினவிழாவில் சிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட இணைப்பாளர் செல்வி லிபி கெனாட் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் சு. தேவராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வலி-தெற்கு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு செல்வி லிபி கெனாட் பரிசுகளை வழங்கினார்.

இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயக்கல்லூரி, கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர்களின் கும்மி, கோலாட்டம், நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி க. கற்பரானந்தனும் விழாவில் கலந்து கொண்டார்.

மறுநாள் வியாழக்கிழமை நடைபெற்ற முதியோர் தினவிழாவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 30 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள இவ்விரண்டு முதியவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 60 பேர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு புடைவைகள், சாரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும், அகதிகள் புனர்வாழ்வுக் கழக உபதலைவருமான திரு. நல்லதம்பி இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதியோர் தினம் சம்பந்தமாக நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. (ஐ-152)

## பஸ் சேவை சீரின்மையால் பயணிகள் ஏமாற்றம்

தென்மராட்சி, ஒக். 12

பருத்தித்துறையிலிருந்து காலை 10-30 மணிக்குப் புறப்பட்டு கொடிகாமம் ஊடாக சாவகச்சேரிக்கு வரும் 759 ஆம் இலக்க பஸ் சேவை ஒழுங்காக நடத்தப்படாததால் அன்னாலை, வரணி, சுட்டிபுரம் பகுதி மக்கள் தினமும் ஏமாற்றத்துடன் தட்டி வான்களில் தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

பருத்தித்துறை டிப்போவினால் இந்த பஸ் சேவைக்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் வாரத்தில் ஒரு தடவை நடத்தப்படும் இச்சேவை தடைப்படுவதால் பயணிகள் ஏமாற்றமடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### நாளை

புரட்டாதி - 27

செவ்வாய்க்கிழமை

திதி: அட்டமி

முற்பகல்: 10, 17 வரை;

நட்சத்திரம்: பூநர்பூசம்

பிற்பகல் 01.41 வரை;

சுபநேரம்: 10.32 - 12.02

ராகுகாலம்: 3.02 - 04.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தொழில் எத்தனை தாழ்ந்ததாக இருந்தாலும், அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை.

- டால்ஸ்டாய்

## ஆலய இசை நிகழ்ச்சியில் நாகபாம்பும் பிரசன்னம்!

தென்மராட்சி, ஒக். 12

ஆலய உற்சவத்தின் போது இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை மரத்தின் சிறிய கிளையொன்றில் படமெடுத்தவாறு நாகபாம்பு ஒன்று கேட்டு ரசித்தது!

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமையன்று இரவு வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலய தீர்த்த உற்சவத்தையிட்டு இரவு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை ஆலய முன்றலில் உள்ள மரத்தின் கீழ் இருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் ரசித்துக் கொண்டிருந்த வேளையில் மரத்தின் மேல் கிளையொன்றில் நாகபாம்பு ஒன்று நீண்டநேரம் படம் எடுத்தபடி இருந்தது. இசை நிகழ்ச்சி முடிவடைந்து உற்சவ மூர்த்தி வெளியே கொண்டு வரப்பட்ட பின்னர் பாம்பை அவ்விடத்தில் காணமுடியவில்லை. (ஐ-117)

## மயானம் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஒக். 12

அளவெட்டி கொட்டுப்பனை மயானம் சிரமதான அடிப்படையில் அளவெட்டி முறபோக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மயானத்தை சகல வசதிகளும் கொண்டதாக மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-152)

## கூட்டுறவுகணக்காய்வாளர் பயிற்சி நெறி ஆரம்பம்

திருநெல்வேலி, ஒக். 12

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர் பயிற்சி நெறி யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் எதிர் வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சிக்கு 60 பேர் எழுத்துப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை ஆகியன மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆறு மாத காலம் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்ட பின்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கணக்காய்வு தொடர்பான பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு யாழ். மாவட்டத்தில் பலத்த பற்றாக்குறை நிலவிவருவதால் கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த கணக்காய்வு வேலைகள் கடந்த பல வருடங்களாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

## தனக்குத்தானே தீ மூட்டியவர் மரணம்

வடமராட்சி, ஒக். 12

மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீமூட்டிய இளம் குடும்பப் பெண் ஒருவர் ஒரு வார காலத்துக்குப் பின்னர் மரணமானார்.

தென் புலோலி குரும்பை கட்டியைச் சேர்ந்த ரங்கேஸ்வரன் பிரபா (24 வயது) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு மரணமானவராவார்.

குடும்பத் தகராறு காரணமாகவே இவர் தனக்குத் தானே தீ மூட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173-109)

## ஜெனரேட்டர்களைத் திருத்த உதிரிப் பாகங்களை எடுத்துவர முடியாத நிலை

யாழ். குடாநாட்டில் பழுதடைந்துள்ள ஜெனரேட்டர்களுக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள், போக்குவரத்து வசதிகளின்மையால் கொழும்பில் தேங்கியுள்ளன.

இலங்கை மின்சாரசபை குடா நாட்டில் மின்விநியோகத்துக்குப் பயன்படுத்தும் ஜெனரேட்டர்கள் சில பழுதடைந்துள்ளன. இவற்றுக்கான உதிரிப்பாகங்கள் கொழும்பில் பெறப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்து வசதி இன்மையால் அவற்றை இங்கு எடுத்து வந்து ஜெனரேட்டர்களை உரிய காலத்தில் திருத்த முடியாதிருப்பதாக இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-173-109)

## விதை நெல் விநியோகம்

பளைப் பிரதேச முல்லையடி விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த முப்பது நெற்செய்கையாளர்களுக்கு 'கெயர்' நிறுவனமும் பளை விவசாயத் திணைக்களமும் இணைந்து பி. டபிள்யு 351 இலக்க விதை நெல்லினைத் தலா ஒரு புசல் வீதம் அண்மையில் முல்லையடி பாலர் பாடசாலையில் வைத்து வழங்கின. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலம் ஒன்றைக் கட்டி இழுத்துவந்த படையினர் கணவரை கைதுசெய்தனர்

## மனைவி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்: 12 கடந்த 8 ஆம் திகதி இரவு 8. 30 மணியளவில் எமது கிராமமான வேலணை 2 ஆம் வட்டாரத்துக்கு சடலம் ஒன்றைக் கொண்டு வந்து அடையாளம் காட்டுமாறு கூறிய கடற்படையினர் எனது கணவர் உட்பட மூவரைக் கைது செய்து கொண்டு சென்றனர்; இவ்வாறு வேலணையைச் சேர்ந்த திருமதி சிவலிங்கம் தெய்வநாயகி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது —

சம்பவதினம் சடலம் ஒன்றைக் கட்டி இழுத்து வந்த கடற்படையினர் எமது வீட்டிற்கு முன்னால் நின்று எம்மை வெளியே வருமாறு கூப்பிட்டனர்; நாங்கள் பீதி காரணமாக வெளியே வரவில்லை. அதனால் துப்பாக்கிகளிலிருந்து வேட்டுக்களைத் தீர்த்தார்கள்; உடனே வீட்டுக்குள்ளிலிருந்த எல்லோரும் வெளியே வந்தோம்; அப்போது எனது கணவன் சி. சிவலிங்கம் (45 வயது), எமது உறவினர்களான அ. சிவப்பிரகாசம் (38 வயது), ச. சசிகரன் (18 வயது) ஆகியோரைக் கைது செய்து சடலத்தைக் காட்டி இது யார் என்பது தெரியுமா என்று கேட்டார்கள்; நாங்கள் தெரியாது என்று சொன்னோம்; தாங்கள் கைது செய்து வைத்திருந்த மூவரினதும் கைகளைச் கட்டித்தம்முடன் கொண்டு சென்றனர்;

கைது செய்யப்பட்டவர்களைத்தேடி அடுத்த நாள் வேலணை கடற்படை முகாமிற்குச் சென்றோம். அவர்களைத் தாம் கைது செய்யவில்லை என்று கையை விரித்து விட்டார்கள்— என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ-5-9)

## கோப்பாய் பாடசாலைகளில் நூலக அபிவிருத்திக்கு கலை விழா மூலம் நிதி

பருத்தித்துறை, ஒக். 12 கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு பாடசாலை நூலக அபிவிருத்திக்கான நிதியினை கோப்பாய் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திச்சபை வழங்கவுள்ளது;

சென்ற மாதம் கோப்பாய் கல்விக்கோட்ட கல்வி அபிவிருத்தி சபையினரால் நடத்தப்பட்ட கலை விழாவின் மூலம் 67 ஆயிரத்து ஐந்நூறு ரூபா சேமிப்பாகக் கிடைத்துள்ளது; இக்கலைவிழாவிற்கான அன்பளிப்பு நுழைவுச் சீட்டுக்களை சகல பாடசாலைகளும் விற்றதன் பேரில் நிதியாக 94 ஆயிரத்து 280 ரூபா கிடைத்துள்ளது; இக்கலை விழா இரு கல்லூரி மேடைகளில் இரு நாள்கள் நடத்தப்பட்டது; இதற்கு 26 ஆயிரத்து 760 ரூபா (26,750/-) செலவு ஏற்பட்டது; இலாபமாகக்கிடைத்த நிதியினை கோப்பாய் கல்விக் கோட்ட சகல பாடசாலைகளுக்கும் நூலக அபிவிருத்திக்காக வழங்குவதற்கு அண்மையில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது; இந்நிதியினை கோப்பாய் கல்வி அபிவிருத்திச் சபையிடமிருந்து மீளப் பெறுவதாயின் அவ்வப்பாசாலைகளால் திரட்டப்பட்ட நிதிக்கேற்ப நூலகத்திற்கான நூல்களைக் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டுக்களை உரிய முறையில் ஒப்படைத்துப் பெற்றுக்கொள்ளலாம் என கோப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஐ-118)

## 27 தாதிய மாணவர்கள் இறுதிப்பரீட்சையில் சித்தி

யாழ். போதனாவைத்தியசாலையின் தாதிய பயிற்சிப் பாடசாலையில் மூன்றுவருட பயிற்சி நெறியை முடித்துக் கொண்டு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன;

இப்பரீட்சையில் தோற்றிய 30 தாதிய மாணவர்களில் 27 பேர் சித்தியடைந்துள்ளனர்;

இவர்களுக்கான தாதியநியமனக்கடிதங்கள் அனுப்பி வைக்கத் தாமதமான போதிலும், போதனாவைத்தியசாலையில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சித்தியடைந்தவர்கள் கடமையில் சடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ-15-139)

## மனிதவள அபிவிருத்தி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் ஒக். 12 மனிதவள அபிவிருத்தி பயிலுநர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று அண்மையில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் 'கெயர்' ஸ்தாபனத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது;

இப்பயிற்சி நெறியில் திருகோணமலையில் இருந்து மனிதவள நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இதில் சமநல சேவைகள் உத்தியோகத்தர்கள், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள், கல்வித்திணைக்கள விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் 'கெயர்' நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்;

சுமார் 10 வருடங்களின் பின்னர் இவ்வாறான ஒரு பயிற்சி நெறி நடத்தப்பட்டுள்ளதாகவும் —

இப்பயிற்சி நெறியில் விவசாயத்துறையின் அண்மைய நவீன தொழில் நுட்பங்கள், பயிர்ச்செய்கை முறைகள் என்பன தொடர்பாக பயிற்சியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் 'கெயர்' வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ - 6 - 5]

## சட்டவிரோதமாக மின் பெற்றவருக்கு அபராதம்

சட்டவிரோதமான முறையில் மின்சாரக் கம்பியில் இருந்து களவாக மின்சாரம் பெற முற்பட்ட ஐந்து இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

வடமராட்சிப் பகுதியில் உள்ள நவிண்டிலில் கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது;

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த ஐவரும் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்;

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நெல்லியடி பொலீஸாரினால் இந்த ஐவரும் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார். (ஐ-109-173)

## வணிகஜோதி மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 12 யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தினரின் 'வணிகஜோதி' நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வி. விக்னேசுரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் ப. சிவநாதன் பிரதம விருந்தினராகவும், வணிகக் கல்வி உதவிப் பணிப்பாளர் வ. க. பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நிதி உதவியாளர் க. கனகரட்ணமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணமும் நிகழ்த்துவர். (ஐ-9)

## தமிழ் மொழித் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 12 யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் தமிழ் மொழித் தினவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி ரீ. ஏ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லூர்-யாழ்ப்பாணக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-8)

## கிணறுகளுக்கு குளோறின்

பருத்தித்துறை, ஒக். 12 பருத்தித்துறை, புலோலி, அல்வாய்ப் பகுதிகளிலுள்ள பொதுக்கிணறுகள், ஆலயம், பாடசாலைகளிலுள்ள கிணறுகள், தனியார் வீடுகளிலுள்ள கிணறுகள் ஆகியவற்றுக்கு குளோறின் இடும் வேலைகள் இவ்வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன; பருத்தித்துறை சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதாரப்பரிசோதகர் தலைமையில் சுகாதாரத் தொண்டர்கள் மூலம் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-118)

# செய்திக் கொத்து

### கட்டாக்காலி ஆடு, மாடுகள்

சண்டிலிப்பாய் ஒக். 12 பண்டத்தரிப்பு, வடலியடைப்புப்பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளால் பயிர் வகைகளுக்கு பலத்த அழிவு ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

வடலியடைப்பு வயல் வெளியில் அண்மையில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் இதுபற்றி இப் பகுதிக்குப் பொறுப்பான விவசாய சம்மேளனம் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இங்குள்ள விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-3511)

### குடியிருப்பு வீதி புனரமைப்பு

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோயிலில் கொட்டோடை மீனவர் குடியிருப்பு வீதி இன்று திங்கட்கிழமை முதல் புனரமைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் கீழுள்ள பகுதிகளில் தொழில் வாய்ப்பு, வீதி அபிவிருத்திக்கென அகதிகளுக்கான ஐ. நா. தாபரகம் ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாகவே கொட்டோடை வீதி, பருத்தித்துறை பிரதேசசபையின் அனுசரணையுடன் செப்பனிடப்படவிருக்கின்றது. (ஐ-109)

### பளையில் வரட்சி நீடிப்பு

தென்மராட்சி, ஒக். 12 பளைப் பிரதேசத்தில் இன்னமும் மழை பெய்யாததால் நெற்செய்கைக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள முடியவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் உள்ள பல குளங்கள் நீர்வற்றிக் காய்ந்து போயிருப்பதால் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரிவதைக் காண முடிகிறது. (ஐ-117)

### விவசாய வீதி அமைப்பு

உ.லி. தென்மேற்கு, ஒக். 12 பத்து அடி அகலத்தில் விவசாய வீதியை மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் அமைத்துள்ளது;

நவாலி— கட்டுடைப் பகுதியில் ஆரம்பிக்கும் ஒன்றரை மைல் நீளமான இந்த விவசாய வீதி உலக உணவு ஸ்தாபன திட்டத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தலைவர் சி. பொ. வ. ம. க. முதலியார் தெரிவித்தார். (ஐ-185)

### கால்நடை அபிவிருத்திச் சங்கம்

தென்மராட்சி, ஒக். 12 தென்மராட்சி கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் கு. சுப்பிரமணியம் தலைமையில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. (ஐ-117)

### ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஒக். 12 சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயம் பல இலட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. முன்னர் இப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இந்த ஆலயம் பலத்த சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்திற்கு இவ் வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இரண்டரை இலட்சம் ரூபா புனரமைப்பு வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

### கப்பலில் மருந்து

திருநெல்வேலி, ஒக். 12 கடந்த செவ்வாய்க்கிழமை இங்குவந்துசேர்ந்த செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவினர்: கப்பலில் யாழ் சுகாதாரத் திணைக்களத்திற்குநோய்த்தடுப்பு ஊசி மருந்துகளும்—

'யுனிசெவ்' நிறுவனத்தினால்வழங்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கான தளபாடங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

சூரிய வெப்பத்தினால் இயங்கும் குளிர்சாதனப் பெட்டியொன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஐ-135)

### பிரதேச செயலகத்தில் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக். 12 நல்லூர்ப்பிரதேச செயலகத்தில் கடந்த முன்தினம் புதன்கிழமை இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். மருத்துவ பீட வைத்திய பயிற்சி மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த பரிசோதனை முகாமில் மேற்படி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். (ஐ-7)

### பஸ்தரிப்பு அடையாள பலகைகள்

சுழிபுரம், ஒக். 12 சுழிபுரம் பகுதியில் பஸ் தரிப்பு இடங்களைக் காட்டும் சின்னங்கள் நடப்பட்டு வருகின்றன. (ஐ-28)

### பனை விதை நடுவதற்குத் திட்டம்

வலி. வடக்கு, ஒக். 12 பனை அபிவிருத்திச் சபையினால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல லட்சக்கணக்கான பனம் விதைகள் நடப்படவுள்ளன.

கடந்த காலங்களில் பல ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதனை ஈடு செய்யும் முகமாக பொது இடங்கள், பாடசாலைகள், மயானங்கள் மற்றும் தரிசு நிலங்களில் இவை நடப்படவுள்ளன.

இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பிரதேச செயலர் மட்டங்களில் கிராம அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ம ஹெலி பற்றிய தகவலை அடுத்து
# விமான எதிர்ப்பு பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, ஒக், 12

வடக்கில் இனந்தெரியாத மர்மவிமானம் ஒன்று அண்மையில் பறந்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்து விமானப் படையினர் தங்கள் விமான எதிர்ப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் திவிரப்படுத்தியுள்ளதாக விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் தென்பட்டதாகக் கூறப்படும் விமானம் அல்லது ஹெலிகொப்டர் குறித்து தாங்கள் மிக அக்கறையாக இருப்பதாக விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளனர். கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் புலிகள் விமானத் தாக்குதல்களை நடத்தும் சாத்தியம் இருப்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

விமானத்தை அல்லது ஹெலிகொப்டரை புலிகள் கொள்வனவு செய்தார்களா என்பது குறித்து விமானப் படையினருக்கோ அல்லது புலனாய்வுத் துறையினருக்கோ தெரியவரவில்லை.

கடந்த மாதம் முல்லைத்தீவுக் கடற்பகுதியில் சென்று கொண்டிருந்த கடற்படைக் கப்பலின் 'ராடர்' திரையில் இனங்காண முடியாத எதிரொலியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து விடுதலைப் புலிகள் ஹெலிகொப்டர் ஒன்றைக் கொள்வனவு செய்திருக்கலாமென்ற ஊகம் படையினர் மத்தியில் எழுந்துள்ளது. தரைக்கு மேலால் சென்று கொண்டிருந்த ஒரு பொருளின் எதிரொலியையே ரோந்துக் கப்பலின் ராடர் பதிவு செய்ததாகச் சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது பறவைக் கூட்டமாகக் கூட இருக்கலாமெனவும் அவர் தெரிவித்தார்.

புலிகள் சிறிய விமானமொன்றைப் பகுதி பகுதியாகக் கடத்தி வந்து அதனை இங்கு பொருத்தியிருக்கலாமெனவும் இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர். இது ஒரு சிறந்த தாக்குதல் ஹெலிகொப்டராக இருக்குமெனத் தாங்கள் கருதவேயில்லை எனவும் ஓர் அதிகாரி கூறினார்.

(ஐ-10)



## வாழ்த்துகின்றோம்

**திருமதி அசோகமாலாதேவி ஜெயராமச்சந்திரன்**

கலங்கரை விளக்கே
முதுமெய்யியல் மாணியே
அசோகமாலாதேவி
பல வளம் பெற்றிட
வாழ்த்துவோம் வாழ்க!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

(59855)

## ஓராண்டு நினைவு

அருள்திரு.
**D. J. அம்பலவாணர்**
முன்னாள் பேராயர் மறைவின்
ஓராண்டு நிறைவு

திடனற்ற மக்களைத் திடன்
உள்ளவர்களாக்குவதை
தனது முதன்மை இலக்காகக்
கொண்டு, அந்த இலக்கை நோக்கிய
நகர்வை தன் தொடர்பாடல் திறன்
மூலம் நேர்கணிய வழிநடத்தல்
ஆற்றல் மூலம் நடைமுறைப்படுத்திய
தலைமைத்துவத்தை நினைவு
கூருகின்றோம்.

எஸ். கே. செல்வராஜா,
செயலாளர்,
மானிப்பாய் திருச்சபை.

(59852)

## கண்ணீர் அஞ்சலி

உயர்திரு
**கார்த்திகேசு ஐயம்பிள்ளை**

(ஓய்வு பெற்ற அதிபரும், ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய தேர்த் திருப்பணிச்சபைச் செயலாளரும், ஆலய பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளரும் வரியப்புலம் சனசமூக நிலைய முன்னாள் செயலாளரும்),

அவர்கள் 11-10-98 இல் சிவபதமடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தேர்த் திருப்பணிச்சபையினர்
ஆலய பரிபாலன சபையினர்
சனசமூக நிலைய நிர்வாகத்தினர்

வரியப்புலம்,
சுன்னாகம்.

(59858)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி
# மன நோயாளர்களுடன் உறவினர் தங்க வேண்டும்

சண்டிலிப்பாய், ஒக். 12

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் மன நோயாளர் வார்ட்டில் மன நோயாளர்களை அனுமதிப்பதில் வைத்தியசாலை நிர்வாகம் புதிய நடைமுறைகளைப்பின்பற்றி வருகின்றது.

இங்கு வார்ட்டில் அனுமதிக்கப்படும் மன நோயாளியுடன் அவரது உறவினரான உதவியாளர் ஒருவரும் கூட நிற்க வேண்டும் என்ற விதி அண்மைக்காலமாக கண்டிப்பாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் இவ் வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்தே இவ்வாறான நிபந்தனை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. இந்தப் புதிய நடைமுறையினால் தமது உறவினர்கள் எவரும் இல்லாத மன நோயாளர்கள் இங்கு வார்ட்டில் அனுமதி பெற முடியாது மிகவும் சிரமப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-135)

## பயணிகளுக்கு வசதியாக
# 'வாதுவ' கப்பலில் தற்காலிக மலசலகூடம்

வடமராட்சி, ஒக். 12

கொழும்புக்கு பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக ''வாதுவ'' கப்பலில் சுமார் பத்து தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் ஆயிரம் பயணிகள் ''வாதுவ'' கப்பல் மூலம் பயணஞ் செய்யவுள்ளனர்.

(ஐ-15-173)

# சிறு நீர்ப்பாசனக் குளங்களின் முதற்கட்ட புனரமைப்புப்பணி பூர்த்தி

வலிகாமம்தெற்கு, ஒக். 12

உலக உணவு ஸ்தாபனத்தின் ஆதரவுடன் கமத்தொழில் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுநீர்ப்பாசன குளங்கள், வாய்க்கால்களின் புனரமைப்பு வேலைகளின் இவ்வருடத்துக்கான பணிகள் இன்னும் ஓரிருவாரத்துடன் பூர்த்தி செய்யப்படும் என யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜூலைமாத நடுப்பகுதியில் ஆரம்பமான மேற்படி புனரமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன.

மிகக் குறுகிய காலத்தில் பெரிய அளவிலான இவ் வேலைத்திட்டங்களை இலகுவாகமுடித்துக்கொள்ள உதவியமைக்காக விவசாய சம்மேளனங்களுக்கு அவர் பாராட்டுக்கள் தெரிவித்தார்.

முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளாக திருத்தப்படாமல் இருந்த 47 சிறிய நீர்ப்பாசன குளங்களும், 12 விவசாய வீதிகளும் ஆயிரக்கணக்கான மனித வலுக்களைப் பயன்படுத்தி இவ்வாண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஏனையகுள புனரமைப்புப் பணிகளும் சிறுசிறு வேலைத் திட்டங்களும் அடுத்த வருடம் முன்னெடுத்து நடத்தப்படும்— என்றும் அவர் தெரிவித்தார்.

கமநல சேவை திணைக்கள ஆணையாளர் பிரிவைச் சேர்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. ஆனந்தராசா அங்கு உரையாற்றுகையில் எடுத்த வேலைத்திட்டத்தை எதிர்பாராத அளவுக்கு விரைவாகவும் முன்னேற்றகரமாகவும் முடித்துத் தந்துள்ள விவசாய சம்மேளன பிரதிநிதிகளுக்கும் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட இவ் வேலைத் திட்டத்தினை திருப்தியாகவும், வெற்றிகரமாகவும் முடித்திருப்பது மேலும் அதிகளவிலான உதவிகளை உலக உணவு ஸ்தாபனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள வழி செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ-152)

# ஜெமினி மூன்றாவது திருமணம்

சென்னை, ஒக். 12

காதல் மன்னன் எனப் புகழ்படைத்த பிரபல தென்னிந்திய நடிகர் ஜெமினி கணேசன் மூன்றாவது முறையாகத் திருமணம் புரிந்துள்ளார்.

ஏற்கனவே இருமுறைகள் திருமணம் முடித்த இவரின் மூன்றாவது மனைவியின் பெயர் ஜூலியான் என்ரூஸ் (வயது 35) இவர் ஒரு பட்டதாரி.

இவர் சிங்கப்பூரில் தனியார் நிறுவனம் ஒன்றில் அந்தரங்கச் செயலாளராகப் பணிபுரிந்து வந்தவரென்றும் தெரியவருகிறது. 76 வயதான ஜெமினி கணேசன் பாபுஜி, நடிகையர் திலகம் சாவித்திரி ஆகியோரைத் திருமணம் முடித்ததன் மூலம் நான்கு பிள்ளைகளின் தந்தையுமாவார்.

இவரது மூன்றாவது திருமணம் சென்னையிலுள்ள பிரபல்யமான ஆலயம் ஒன்றில் நடந்தேறியுள்ளது.

(ஐ-10)

# விழுந்தவர் சுயநினைவு இழந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 12

படுத்திருந்த கட்டிலில் இருந்து விழுந்த குடும்பப் பெண் ஒருவர் சுயநினைவை இழந்தார்.

நவாலியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் 5 பிள்ளைகளின் தாயான ஜெயம் பூமய (வயது 39) என்பவரே சுயநினைவிழந்தவராவார்.

சுயநினைவிழந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

சுன்னாகம்
றோட்டரக்ட் கழகம்

## விருந்தினர் உரை

பொருள்: ' கணனியின் அறிமுகமும் சர்வதேச வலைப்பின்னலும்'
அதிதி: திரு. V. சிவகுமார் (Lectur DCS College of Computer Technology)
காலம்: 13 - 10 - 98 செவ்வாய்க்கிழமை (பிற்பகல் 3.30 மணி)
இடம்: யா / இராமநாதன் கல்லூரி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Rtr. S. கணேந்திரா
தலைவர்

விளம்பர அன்பளிப்பு
**ஸ்ரீ ரங்கன் ஆடையகம்**
பலாலி றோட், திருநெல்வேலி.

(கி/5158)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

நிவாரண வெட்டை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த விடயங்களில் அரசின் பாராமுகமான செயல்களுக்காக அதிருப்தி அடைந்துள்ளோம் அரசின் அணுகுமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசு இவ்விடயங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்ய விருக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) (இ-3-21)

### கோஷ்டி.....

(முதலாம் பக்கத் தொடர்)

வாணிவிழாவின் போது இருகல்லூரி மாணவர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது இந்த தகராறு கோஷ்டிச் சண்டையாக உருவெடுத்து சென். தோமஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான டேவிட் பொன்னையா என்பவர் கத்திக்குத்துக்கு இலக்காகிமரணமானார்.

காயமடைந்த சென்.தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த 6 மாணவர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த கோஷ்டிமோதலைத் தொடர்ந்து நேற்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு கல்வீச்சு இடம் பெற்றது. (இ-3)

## அடிக்கட்டு பசளைகையிருப்பு முடிவு

தென்மராட்சி கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட அடிக்கட்டுப் பசளை (அமோனியா) கையிருப்பு முடிந்து விட்டதால் போதனாசிரியரின் சிபார்சுக்கமைய கலவை செய்யப்பட்ட பசளை தற்போது கமநல சேவை நிலையங்களில் வழங்கப்படுவதாக தென்மராட்சி பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் சு. சத்தியேந்திரன் அறிவித்துள்ளார்.

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி வெளிநாட்டில் இருந்து திரும்பியதும் உடனடியாக இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

அதே நேரம்— கிளிநொச்சி தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றம் இவ்வாரம் தனது விசாரணைகளை ஆரம்பிக்கும். [இ-3]

### ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்குதல் இடம்பெற்றது.

மின்சாரக் கம்பத்துடன் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு "றிமோற் கொன்ரோல்" கருவி மூலம் வெடிக்கவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

த. பாஸ்கரன், த. பிரேமதாஸ், ஜோ. சண்முகராஜா, சி. அரியதாஸ் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்களுடன்கூடவந்த ஜோன்ஜெயராசா, க.சந்திரமோகன் ஆகியோர் காயமடைந்தனர். (இ-3-21)

### இளம் குடும்பஸ்தர்..,

(முதலாம் பக்கத் தொடர்)

மாணவர் ஆவார்.

துப்பாக்கிச் சூடு காரணமாக இவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது தாயாரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிலருடையினருடன் ஏற்பட்ட வாக்குவாதம் ஒன்றை அடுத்து இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-117-15-36)

### கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்தது.

பருத்தித்துறைக் கடலில் கரையில் இருந்து 50 மைல் தூரத்தில்இந்தக்கப்பல்வந்து கொண்டிருந்த சமயம் வீசிய கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு ஆகியவற்றால் கப்பல் ஆட்டம் கண்டுமேற் தளத்தில் கவச வாகனம் கட்டப்பட்டிருந்த சங்கிலி அறுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் இருந்து வீழ்ந்த கவச வாகனம் கடலில் மூழ்கியது.

பிரிட்டனில் உற்பத்திசெய்யப்பட்ட "சரசசன்" ரகத்தைச் சேர்ந்த இந்த கவச வாகனம் பாதுகாப்புப் படையினரின் பாவனைக்காக கப்பலில் எடுத்து வரப்பட்டதாக அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

கப்பலில் இருந்து கடலுக்குள் வீழ்ந்த இரு மாலுமிகள், ஆறு படையினர் இன்னமும் மீட்கப்படவில்லை.

கடலில் வீழ்ந்த கவச வாகனத்தை மீட்கவும்—

காணாமற்போன எண்மரையும் கண்டு பிடிக்கவும்— நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-3-6-10-15-36-21]

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தைப் பெற்று அதன் அடிப்படையில் பின்னர் முடிவு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3-21)


## அறிவித்தல்

### யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எமது பாடசாலையிலிருந்து 1998 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோரை கல்லூரிக்குச் சமுகந் தந்து என்னைச் சந்திக்கும்படி வேண்டுகின்றேன்.

— அதிபர்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

(சி/5161)

## கோபிகா ஆடையகத்தின்

### மாபெரும் மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களே! மலிவு விற்பனை என்றால் தரம் குறைந்த பொருள்கள் என்று எண்ணி விடாதீர்கள்! தரமான பொருள்களை மக்களின் சுதந்திர விலைக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளவே தள்ளுபடி செய்கிறோம்.

இத்தள்ளுபடி எதிர்வரும் 19-10-98 வரையுமே!

## கோபிகா ஆடையகம்

5/4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 2377

(சி/5159)

## SALE! SALE!

## தரம்! மலிவு!

## அமோகதெரிவு!

தீபாவளித் திருநாளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸின்

(புடைவைத் தினுசுகள், ரவுசர் தினுசுகளின் ராஜமுத்திரை)

தள்ளுபடி! தள்ளுபடி!! தள்ளுபடி!!!

யாழ். நகரில் தையற் கலையிலும், புடைவை துறையிலும் குறுகியகால இடைவெளியில் எண்ணற்ற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும் ஒரே இடத்திலேயே அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய உங்கள் நண்பன்.

இன்று முதல் 20-10-1998 வரைக்கும் விசேட தள்ளுபடியில் பெற்றுக்கொள்ளலாம்.

## CITY TAILORS

[Specialist in Wedding Coats & Suits]

* எமது சேவைகள்,

எம்மிடம் குறைந்த பணத்தைச் செலுத்தி முன் கூட்டியே ஜீன்ஸ் துணிகளை எடுத்துத் தைத்துக் கொடுத்தபின் முழுப்பணத்தையும் செலுத்தி ஜீன்ஸ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

* எம்மிடமே துணி எடுத்துத் தைப்பவர்களுக்கு தையற் கட்டணம் 25/- ரூபா குறைக்கப்படும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! இன்றே!!!

உங்களது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த

73, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களின் திருப்தியே சிற்றியின் திருப்தி

அனைத்து ரக றெடிமேட் ஆடைகளையும் நவீன டிசைன்களில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள.

## மாருதி ரெக்ஸ்

[Specialist in Readymade Items]

இல. 1. பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் வெளியூர் தொலைத்தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம் உள்ளூர்

021 — 2999 பக்ஸ் 021 — 2050

தொலைபேசி இலக்கம் சர்வதேசம்

094 — 21 — 2999 பக்ஸ் 0094 — 21 — 2050

24 மணிநேர சேவை

தங்கும் இடவசதி, செய்தி விநியோகம் உடனுக்குடன் இலவசம்.

## குமார் ஏஜென்ட்

342, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5156)



உ

சிவமயம்

## மங்களகரமான திறப்பு விழா

1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல் காரணமாக சேதமடைந்த எமது ஸ்தாபனம் மீண்டும் சகல வசதிகளுடனும் புனரமைக்கப்பட்டு — வட இலங்கையில் பழமை வாய்ந்த ஜவுளி வியாபாரத்தில் முதன்மை வாய்ந்த சில்லறை மொத்த வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஸ்தாபனம் - மீண்டும் அதே இடத்தில் சகலவகையான ஜவுளிகளுடனும் இன்று [12 - 10 - 98] மங்களகரமாக திறந்து வைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகளை நேரடியாக தரமுடியாமைக்கு வருந்துகிறோம்

இந்த அன்புடனான அழைப்பை ஏற்று அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் திறப்புவிழாவில் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

T. P. 2985

(இ/5148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.